கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)

# மாதிரிப் பரீட்சை -IV 2018

வரலாறு II

| 33 | T | II |
|---|---|---|

மூன்று மணித்தியாலம்

- ❖ பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) தெதுறுஓயா, ஹெமன்கெயில், பிம்மதித்த, மின்னேரியாவாவி, சிகிரியாபொத்தான. தேவநகரம், காங்கேசன்துறை, புத்தளம், கதிர்காமம், யான்ஓயா, ரந்தெனிவெல, தீகவாவி (12 புள்ளி)

(ii) பாரசீகவளைகுடா, நன்னம்பிக்கைமுனை, பத்தேவியா, மகலன்தொடுகடல், பொஸ்ரன், பேள்துறைமுகம்

(06 புள்ளி)

(ஆ) (i) மேல் வரும் ABCD ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - வீராங்குர என்ற விகாரையில் வாழ்ந்த பிக்குகளுக்கு தங்கக் கலசங்களைத் தானமாக வழங்கிய மன்னன்

B – தல்தா லஷ்மி தனது நிலங்களின் ஒரு பகுதியை பௌத்த விகாரைகளுக்கு வழங்கிய போது ஆட்சி செய்த மன்னன்

C – மினிப்பே அணை, கால்வாய் என்பவற்றைக் கட்டிய மன்னன்

D 1765 இல் அமெரிக்கக் குடியேற்ற நாட்டிற்கு எதிராக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்திய பிரித்தானிய பிரதமர் (04 புள்ளிகள்)

❖ A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலங்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A



(ii) 1. A யினால் காட்டப்பட்டுள்ள கோவிலின் பெயர் என்ன?

2. இக் கோவில் அமைந்தள்ள இடம் எது?

3. இக் கோவில் அமைந்திருந்த புராதன இராசதானியின் பெயர் என்ன?

4. இக் கோவிலின் பிரதான தெய்வம் யாது? (4 புள்ளி)



(iii) 1. B இனால் காட்டப்பட்ட விகாரையின் பெயர் என்ன?

2. இவ் விகாரையைக் கட்டிய மன்னன் யார்?

3. இவ் விகாரையில் உள்ள புனித சின்னம் யாது?

4. இவ் விகாரை அமைந்தள்ள மாவட்டம் எது?

(4 புள்ளி)

## பகுதி - II

02) (i) இலங்கையின் குடியிருப்புக்கள் பரவியிருந்த காலநிலை வலயங்களுள் மூன்று வலயங்களைத் தருக. (3 புள்ளி)

(ii) "வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதர்கள் இயற்கை வளத்தினை ஏராளமாகப் பயன்படுத்துவதில் முன்னின்றனர்" அவ்வகையில் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்கள் நான்கு தருக. (4 புள்ளி)

(iii) முன் வரலாற்றுக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்ப உத்திகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) வரலாற்றுக் காலத்தில் பிரதேச நிர்வாக முறை குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக. (6 புள்ளி)

03) (i) பின்வரும் A, B, C என்ற கூற்றுக்களுக்கான விடைகளை அதே ஒழுங்குமுறையில் தருக.

A - குறியீடுகளுடன் கூடிய களிமண் முத்திரை கண்டெடுக்கப்பட்ட இடம்
B - பாதிகாபய மன்னனின் உருவச்சிலை காணப்படும் விகாரை
C - பிரபுக்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மணிமாலை கண்டெடுக்கப்பட்ட இடம் (3 புள்ளி)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை A, B, C, D ஒழுங்குமுறையில் எழுதுக.

A - மகாராஜா
B - பொருளாளர்
C - யானைப் பிரிவின் தலைவர்
D - வழக்கங்கள் மரபுமுறைகள் தொடர்பான அதிகாரி (4 புள்ளி)

(iii) குளத்தொகுதி ஒன்றை உருவாக்கியதன் நோக்கங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) பருமகவின் பணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

04) (i) இலங்கையில் அநுராதபுரக் காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) நீர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பின்வரும் விடயங்கள் குறிக்கும் பொருளைத் தருக.

A - ராஜமொஹால்
B - தண்ணீர் விளக்கு
C - அடிக
D - வெவ்பிரபாதனய (4 புள்ளி)

(iii) சிகிரியாவின் நீர்ப் பூங்கா தொழில்நுட்பம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

(iv) இரும்பைப் பிரித்தெடுப்பதில் பின்பற்றப்பட்ட தொழில்நுட்ப முறையை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

05) (i) மேல்வரும் A, B, C ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A - பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் பலம் குறிப்பிட்ட ஒரு நபரிடம் குவியும் நடவடிக்கையை ஆரம்பித்தமை
B - முதன் முதலாக இலங்கையில் சுரங்க வழி நீர்ப்பாசனம் அமைக்கப்படுவதற்குக் காரணமானவன்
C - சகல பிரதேசத் தலைவர்களிடையேயும் நல்லுறவை வளர்க்கும் தேவையை உணர்ந்திருந்தமை (3 புள்ளி)

(ii) பின்வரும் இராசதானிகளின் **இறுதி** மன்னர்களைத் தருக.

A - தம்பதெனியா
B - அநுராதபுரம்
C - கோட்டை
D - பொலன்னறுவை (4 புள்ளி)

(iii) புராதன நாகரிகங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) 1 ஆம் பராக்கிரமபாகு மன்னனின்

a) நீர்ப்பாசன நடவடிக்கைகள்

b) வெளிநாட்டுத் தொடர்பு ஆகிய துறைகளில் வழங்கிய பங்களிப்புக்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

06) (i) கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

(ii) கண்டி இராச்சியத்தில் பின்வரும் நிர்வாகப் பிரிவுகளுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகளின் பெயர்களைத் தருக.

a) ரட்ட
b) திசாவை
c) கோறளை (4 புள்ளி)
d) கிராமம்

(iii) கண்டி இராச்சியத்தில் அரசனுக்குரிய அதிகாரங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) அன்னியராட்சியில் இருந்து கண்டி இராட்சியத்தைக் பாதுகாப்பதற்கு 2ஆம் இராஜசிங்கமன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

07) (i) A, B, C எனப் பெயரிடப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுநர்களின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

A - 1803 கண்டி மீது படையெடுத்தமை
B - 1815 கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்றியமை
C - புகையிரதப் பாதைகளை அமைத்தமை

(ii) 1848 2 ஆவது சுதந்திரப் போராட்டத்திற்கு

A - தலைமை தாங்கிய தலைவர்கள் இருவரையும்
B - சுதந்திரப் போராட்டம் பரவிய இடங்கள் இரண்டையும் தருக.(4 புள்ளி)

(iii) 1848 சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் முக்கியமான மூன்று பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக. ( 6 புள்ளி)

## பகுதி - III

08) (i) மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த மூன்று அறிஞர்களின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

(ii) மேலே A, B, C, D ஆகியவற்றுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பாளர்களை அதே ஒழுங்கில் தருக.

A - புவியீர்ப்பு சக்தி

B - குருதிச் சுற்றோட்டம்

C - புவிகோள வடிவமானது

D - தொலைநோக்கி (4 புள்ளி)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

09) (i) ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்புக்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) 1 ஆம் உலக யுத்த முடிவில் பிரான்சின் பரிஸ் நகரில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட பின்வரும் நாடுகளின் தலைவர்களின் பெயர்களைத் தருக.

A - ஐக்கிய அமெரிக்கா

B - பிரித்தானியா

C - பிரான்ஸ்

D - இத்தாலி (4 புள்ளி)

(iii) 1 ஆம் உலக யுத்த முடிவில் வேர்செல்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) 1 ஆம் உலக யுத்தத்தின் விளைவுகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)



